## எங்கள் மதிப்பிற்குரிய ஆசிரியர்கள்

எங்கள் ஆசிரியர் குழுவில் தேர்ச்சி பெற்ற பேராசிரியர்கள் உள்ளனர்:

- ஷேக் டாக்டர். அப்துல்லாஹ் ஜோலம் உமரி மதனி
- ஷேக் டாக்டர். அப்துல் கனி உமரி மதனி
- ஷேக் குர்பான் அலி மதனி
- ஷேக் அப்துல்லாஹ் மதனி
- ஷேக் ஹாஃபிஸ் ரிஸ்வான் அக்தர் மதனி, முதுகலை
- ஷேக் ஜுனைத் அஹ்மத் மதனி, முதுகலை (மலேசியா)
- ஷேக் நஸீம் மக்கி
- ஷேக் ஆரிப் ஸலஃபி, நத்வி
- ஷேக் ஹாஃபிஸ் அப்துர் ரஹீம் உமரி
- உஸ்தாத் இம்தியாஸ், BA உசூலுத் தீன்
- சர்பராஸ் முஹம்மது, B.COM, CCNA, MCSE
- ஷேக் மொயின் உமரி, முதுகலை
- ஷேக் ஹாஃபிஸ் அப்துல் மன்னான் உமரி

## யார் சேர வேண்டும்?

- **12 ஆம் வகுப்பு முடித்த மாணவர்கள்:** அரபு மற்றும் இஸ்லாமிய படிப்புகளில் உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள்.
- **பட்டதாரிகள் மற்றும் இளம் தொழில் வல்லுநர்கள்:** உங்கள் ஆராய்ச்சி மற்றும் விமர்சன பகுப்பாய்வு திறன்களை மேம்படுத்துங்கள்.
- **நுழைவுத் தேவைகள்:** அடிப்படை அரபு வாசிப்பு மற்றும் எழுதும் திறன்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. ஆனால் ஆரம்பநிலையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

## தொழில் வாய்ப்புகள்

அரபுமொழி மற்றும் இஸ்லாமிய ஆய்வுகளில் பட்டம் பெறுவது பல்வேறு துறைகளில் பணியிடங்களை பெற்றுத் தருகிறது. அவற்றுள்:

- அரசு மற்றும் பொது சேவை
- சர்வதேச உறவுகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் (NGOs)
- கற்பித்தல் மற்றும் கல்வி ஆராய்ச்சி
- பத்திரிகை, வணிகம் மற்றும் பாதுகாப்பு

51, வீரபாண்டி நகர் 3வது தெரு (மேற்கு),
சூளைமேடு, சென்னை – 600 094

+91 6380424715

அல்அஸான் அரபிக் இன்ஸ்டியூட்டில் இணைந்து, அரபு மற்றும் இஸ்லாமிய படிப்புகளில் சிறந்து விளங்குவதற்கான ஒரு மாற்று பயணத்தைத் தொடங்குங்கள். அதே நேரத்தில் உங்களுக்கும் உங்கள் சமூகத்திற்கும் ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குங்கள்.

# அரபி ~~மனம்~~ இருந்தால் மார்க்கம் உண்டு

### இஸ்லாமிய ஞானத்திற்கான உங்கள் நுழைவாயில்

ஆண், பெண் இரு சாராருக்குமான பட்டப்படிப்பு திட்டம்

**3 வருடப் படிப்பு BAக்கு சமமானது;**
**MA சேர்க்கைக்கு தகுதியானது**

AL-AZAAN ARABIC INSTITUTE CHENNAI

alazaaninstitute.com

## அல்அஸான் அரபிக் இன்ஸ்டியூட்

2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த நிறுவனம், பிரபலத் தொழிலதிபர் சையத் ஸாகிர் அஹ்மத் மற்றும் ஷேக் டாக்டர். ஆர்.கே. நூர் முஹம்மது உமரி மதனி (ரஹிமஹுல்லாஹ்) ஆகியோரின் தொலைநோக்கு தலைமையின் கீழ், அரபு மற்றும் இஸ்லாமிய பாரம்பரியத்தின் அறிவுசார் பொக்கிஷங்களை ஆராய்ந்து, வாழ்நாள் முழுவதும் கற்பவர்களை வளர்ப்பதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஷேக் டாக்டர். அப்துல்லாஹ் ஜோலம் உமரி மதனியின் வழிகாட்டுதலின் கீழ், இந்த நிறுவனம் பிரதான மதச்சார்பற்ற கல்வி மற்றும் சிறப்பு வாய்ந்த அரபு, இஸ்லாமிய படிப்புகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்கிறது. பிரகாசமான, ஆர்வமுள்ள மாணவர்களை அரபுமொழியின் அசல் ஆதாரங்களில் இருந்து உண்மையான அறிவைப் பெற நாங்கள் அழைக்கிறோம். எங்கள் பட்டதாரிகள் மார்க்கத்தின், நாகரிகத்தின் நல்ல பிரஜையாக இருப்பதற்குரிய ஆழமான புரிதலுக்காக மதிக்கப்படும் முன்மாதிரிகளாக உருவாகிறார்கள்.

## அங்கீகாரம்

எங்கள் 3 வருட ஃபஸிலத் பட்டம் மௌலானா ஆசாத் தேசிய உருது பல்கலைக்கழகம், ஹைதராபாத், அங்கீகாரம் பெற்றது. மேலும் இது அரபு & இஸ்லாமியப் படிப்புகளில் BA க்கு சமமானதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பட்டதாரிகள் அரபு, இஸ்லாமிய படிப்புகள், உருது, பாரசீக, பெண்கள் ஆய்வுகள், பொது நிர்வாகம், அரசியல் அறிவியல், வரலாறு, சமூகவியல், பொருளாதாரம் மற்றும் மொழிபெயர்ப்பு ஆய்வுகளில் MA திட்டங்களில் சேர தகுதி பெறுகிறார்கள்.

## ஏன் அல்அஸானைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?

- துடிப்பான தலைமை: தொலைநோக்கு பார்வையுடைய கல்வியாளர்களால் வழிநடத்தப்படுகிறது; சிறந்து விளங்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்: தேசிய மற்றும் சர்வதேச நிபுணத்துவம் கொண்ட தொலைநோக்கு அறிஞர்களால் கற்பிக்கப்படுகிறது.
- திறன் அடிப்படையிலான சர்வதேச பாடத்திட்டம்: அரபு மற்றும் இஸ்லாமிய படிப்புகளுக்கான ஒரு முற்போக்கான அணுகுமுறை.
- முக்கிய இடம்: சென்னை நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது, மாணவர் மற்றும் மாணவியருக்குப் பாதுகாப்பான சூழலுடன்.
- அரபு ஊடகம்: குர்ஆன் மற்றும் இஸ்லாமிய பாரம்பரிய மொழியில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

## திட்டத்தின் சிறப்பம்சங்கள்

| அரபுமொழி | இஸ்லாமிய ஆய்வுகள் | வாழ்க்கைத் திறன்கள் |
|---|---|---|
| • பேசுதல், கேட்டல், படித்தல் மற்றும் எழுதுதல்<br>• இலக்கணம், சொல்லியல் மற்றும் இலக்கியம்<br>• உரைநடை, கவிதை, மொழிபெயர்ப்பு மற்றும் தொடர்பு | • தஜ்வீத், திலாவத், ஹிஃப்ஸ், தஃப்ஸீருக்கான உசூல், தஃப்ஸீர்<br>• அகீதா, அக்லாக், ஹதீஸ், ஹதீஸுக்கு உசூல்,துஆ, ஸீரா<br>• ஃபிக்ஹ், வரலாறு, வாரிசுரிமை மற்றும் ஃபிக்ஹின் கோட்பாடுகள் | • பொதுப் பேச்சு, தகவல் தொடர்பு தகவல் தொழில்நுட்பம்<br>• மென் திறன்கள், போட்டிகள், களப்பயணங்கள்,<br>• கூட்டுறவு, படைப்பாற்றல் மற்றும் விமர்சன சிந்தனை |

## நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள்

அல்அஸான் அரபிக் இன்ஸ்டிடியூட் அரபு மொழி மற்றும் இஸ்லாமிய கல்விகள் பற்றிய ஒரு விரிவான புரிதலை வழங்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. எங்கள் ஃபஸிலத் திட்டத்தின் குறிக்கோள்கள்:

- பாரம்பரிய மற்றும் நவீன அரபு மற்றும் இஸ்லாமிய இலக்கியங்களை ஆராய மாணவர்களுக்கு திறன்களை வழங்குதல்.
- முன்சென்ற நல்லோர்களான அஸ்ஸலஃப் அஸ்ஸாலிஹ் கண்ணோட்டத்தின் மூலம் குர்ஆன் மற்றும் சுன்னாவைப் புரிந்து கொள்ள மாணவர்களுக்கு உதவுதல்.
- சமகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரபு, இஸ்லாமிய ஆய்வுகள், ICT மற்றும் பன்மொழித் தொடர்புகளில் (ஆங்கிலம், தமிழ், உருது) மாணவர்களுக்கு பயிற்சி அளித்தல்.

### பாடத்திட்டம்

எங்கள் **ஃபஸிலத் சான்றிதழ் பாடத்திட்டம்** என்பது ஒரு ஒருங்கிணைந்த மற்றும் முற்போக்கான திட்டமாகும். இது அரபுமொழியை மார்க்கம், வாழ்க்கை மற்றும் இஸ்லாமிய நாகரிகத்தின் மொழியாகக் கற்பிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இது அறிவாற்றல் மற்றும் திறன் அடிப்படையிலான கற்றலை ஒருங்கிணைக்கிறது. மொழி கூறுகளில் (ஒலிகள், சொல்லகராதி மற்றும் கட்டமைப்புகள்) மற்றும் மார்க்கப் புரிதலில் கவனம் செலுத்துகிறது